11 அக 2013

COMMISSIONER OF COMMERCIAL TAXES
10 OCT 2013
CHEPAUK, CHENNAI - 600 005.

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "வணக்கம் சென்னை" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண்.557

30893

நாள்: 10.10.2013
விஜய, புரட்டாசி, 24
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/29809/2013, நாள் 08.10.2013 தேர்வுக்குழு எண்.74/2013–2014.

-----

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "வணக்கம் சென்னை" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், ஐந்து உறுப்பினர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என்றும், ஓர் உறுப்பினர் வரிவிலக்கு அளிக்கலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "வணக்கம் சென்னை" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :-

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | C. பழனி, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை –6. | இத்திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்ற தமிழ் படம் என்றாலும், இப்படத்தின் திரைக்கதை தமிழ் கலாசாரத்திற்கு ஒவ்வாததாக உள்ளதாலும், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டிற்கு உகந்ததாக இல்லை என்பதாலும், திரைப்படத்தில் வேற்று மொழி கலப்பு அளவிற்கு அதிகமாக உள்ளதாலும், திரைக்கதைக்கு தேவை இல்லாமல் அதிக அளவில் ஆங்கில மொழி சொற்கள் மற்றும் வசனங்கள் உள்ளதாலும், திரைப்படத்தில் காட்சிக்கு பொருந்தாத ஆபாச உடைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு பெற அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு பொருந்தாதவாறு எடுக்கப்பட்டுள்ளதாலும், இப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு தர தேவை இல்லை என பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 2. | முனைவர் மு. இராசேந்திரன்,<br>துணை இயக்குநர் (நிருவாகம்)<br>தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>சென்னை –8. | இத்திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளதாலும், விரசமில்லா தமிழ் உரையாடல் மற்றும் கலாச்சாரம், பண்பாடு மாறாமல் இத்திரைப்படம் படமாக்கப்பட்டுள்ளது என்பதாலும், ஆடைகள் ஆங்காங்கே ஆங்கில வழியிலிருந்தாலும், கதைக்கு ஏற்புடையதாக உள்ளதாலும், இத்திரைக் காவியத்திற்குக் கேளிக்கை வரி விலக்களிக்க பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | T.L. மகராஜன்,<br>பின்னணிப் பாடகர் | இத்திரைப்படத்திற்கு 'U' சான்றிதழும், தமிழ் பெயரும் கொண்டிருந்தாலும் தமிழ் கலாசாரத்திற்கு ஒவ்வாத கதையும், ஆங்கிலப் பாடலும், ஆங்கில வசனங்களும் இத்திரைப்படத்தில் இடம் பெற்றிருப்பதால், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | சங்கர் கணேஷ்<br>இசையமைப்பாளர் | நல்ல தமிழ் பெயர் உள்ள திரைப்படம் என்றாலும், 'U' சான்றிதழ் பெற்ற படம் என்றாலும், தமிழ் கலாசாரத்திற்கு உகந்த படம் இல்லை என்பதாலும், ஆங்கில வார்த்தை மற்றும் ஆங்கில பாட்டு உள்ள திரைப்படம் என்பதாலும், இப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | L.R. ஈஸ்வரி<br>பின்னணிப் பாடகி | தமிழ் பெயர் கொண்ட திரைப்படம் என்றாலும் 'U' சான்றிதழ் பெற்ற படம் என்றாலும், தமிழ் கலாசாரத்திற்கு இழுக்கு உண்டாகும் திரைப்படம் என்பதாலும், ஆங்கில வார்த்தைகள் அதிகம் உள்ளதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கத் தகுதியற்றப் படம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | M.N. ராஜம்,<br>பழம் பெரும் நடிகை | தமிழ் பெயர் கொண்ட திரைப்படம் என்றாலும், 'U' சான்றிதழ் பெற்ற படம் என்றாலும், தமிழ் கலாச்சாரத்திற்கு தகுதி இல்லாத கதை என்பதாலும், ஆங்கில வார்த்தைகள் அதிகமுள்ள கதை என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்கிற்கு தகுதி இல்லாத படம் என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், "வணக்கம் சென்னை" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "வணக்கம் சென்னை" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.